## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 3-5 - மொய்ம்மாம்
## (பகவத் கைங்கர்யம் பண்ணுகிறவர்களைக் கொண்டாடியும், அல்லாதாரை நிந்தித்தும் அருளிச் செய்தல்)

2941 * மொய்ம்மாம் பூம்பொழில் பொய்கை * முதலைச் சிறைப்பட்டு நின்ற *
கைம்மாவுக்கு அருள் செய்த * கார்முகில் போல் வண்ணன் கண்ணன் **
எம்மானைச் சொல்லிப் பாடி * எழுந்தும் பறந்தும் துள்ளாதார் *
தம்மால் கருமம் என்? சொல்லீர் * தண்கடல் வட்டத்துள்ளீரே! 1

2942 தண்கடல் வட்டத்துள்ளாரைத் * தமக்கு இரையாத் தடிந்துண்ணும் *
திண்கழற்கால் அசுரர்க்குத் * தீங்கிழைக்கும் திருமாலை **
பண்கள் தலைக்கொள்ளப் பாடிப் * பறந்தும் குனித்து உழலாதார் *
மண்கொள் உலகில் பிறப்பார் * வல்வினை மோதமலைந்தே 2

2943 மலையை எடுத்துக் கல்மாரி காத்துப் * பசு நிரை தன்னை *
தொலைவு தவிர்த்த பிரானைச் * சொல்லிச் சொல்லி நின்று எப்போதும் **
தலையினோடு ஆதனம் தட்டத் * தடுகுட்டமாய்ப் பறவாதார் *
அலைகொள் நரகத்து அழுந்திக் * கிடந்துழைக்கின்ற வம்பரே 3

2944 வம்பவிழ் கோதை பொருட்டா * மால்விடை ஏழும் அடர்த்த *
செம்பவளத் திரள்வாயன் * சிரீதரன் தொல்புகழ் பாடி **
கும்பிடு நட்டமிட்டாடிக் * கோகு கட்டுண்டு உழலாதார் *
தம் பிறப்பால் பயன் என்னே? * சாது சனங்கள் இடையே 4

2945 சாது சனத்தை நலியும் * கஞ்சனைச் சாதிப்பதற்கு *
ஆதியஞ்சோதி உருவை * அங்கு வைத்து இங்குப் பிறந்த **
வேத முதல்வனைப் பாடி * வீதிகள் தோறும் துள்ளாதார் *
ஓதி உணர்ந்தவர் முன்னா * என் சவிப்பார் மனிசரே? 5

2946 மனிசரும் மற்றும் முற்றுமாய் * மாயப்பிறவி பிறந்த *
தனியன் பிறப்பிலி தன்னைத் * தடங்கடல் சேர்ந்த பிரானை **
கனியைக் கரும்பின் இன்சாற்றைக் * கட்டியைத் தேனை அமுதை *
முனிவின்றி ஏத்திக் குனிப்பார் * முழுதுணர் நீர்மையினாரே 6

2947 நீர்மையில் நூற்றுவர் வீய * ஐவர்க்கு அருள் செய்து நின்று *
பார்மல்கு சேனை அவித்த * பரஞ்சுடரை நினைந்தாடி **
நீர்மல்கு கண்ணினராகி * நெஞ்சம் குழைந்து நையாதே *
ஊன்மல்கி மோடு பருப்பார் * உத்தமர்கட்கு என் செய்வாரே? 7

2948 வார்புனல் அந்தணருவி * வடதிருவேங்கடத்து எந்தை *
பேர் பல சொல்லிப் பிதற்றிப் * பித்தர் என்றே பிறர் கூற **

ஊர் பல புக்கும் புகாதும் * உலோகர் சிரிக்க நின்றாடி *
ஆர்வம் பெருகிக் குனிப்பார் * அமரர் தொழப்படுவாரே 8

2949 அமரர் தொழப்படுவானை * அனைத்துலகுக்கும் பிரானை *
அமரர் மனத்தினுள் யோகு புணர்ந்து * அவன் தன்னோடு ஒன்றாக **
அமரத் துணிய வல்லார்கள் ஒழிய * அல்லாதவர் எல்லாம் *
அமர நினைந்து எழுந்தாடி * அலற்றுவதே கருமமே 9

2950 கருமமும் கரும பலனுமாகிய * காரணன் தன்னை *
திருமணி வண்ணனைச் செங்கண் மாலினைத் * தேவ பிரானை **
ஒருமை மனத்தினுள் வைத்து * உள்ளம் குழைந்து எழுந்தாடி *
பெருமையும் நாணும் தவிர்ந்து * பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே 10

2951 * தீர்ந்த அடியவர் தம்மைத் * திருத்திப் பணி கொள்ள வல்ல *
ஆர்ந்த புகழ் அச்சுதனை * அமரர் பிரானை எம்மானை **
வாய்ந்த வளவயல் சூழ் * தண் வளங்குருகூர்ச் சடகோபன் *
நேர்ந்த ஓராயிரத்து இப்பத்து * அருவினை நீறு செய்யுமே 11

**அடிவரவு:** மொய் தண் மலை வம்பவிழ் சாது மனிசர் நீர்மை வார்புனல்
அமரர் கருமம் தீர்ந்த செய்ய